# 13 சந்தான குரவர் பணிகள்

அன்பு, பக்தி நெறியை எவ்வாறு நாயன்மார்கள் வளர்த்தார்களோ அது போன்று அறிவு நெறியை வளர்த்தவர்கள் சந்தான குரவர்கள் ஆவர். சந்தான குரவர்களது வரலாற்றை தரம் பத்தில் கற்றுள்ளோம். சைவநெறியின் வளர்ச்சிக்கு சந்தான குரவர்கள் ஆற்றிய பணிகளை நோக்குவோம்.

## அ. மெய்கண்ட தேவர்




திருக்கைலாய ஞான பரம்பரையில் வந்த புறச் சந்தான குரவர்களுள் முதல்வராக மெய்கண்ட தேவர் காணப்படுகின்றார். அவர் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார். மெய்கண்ட தேவர் ஆற்றிய சைவசமயப் பணிகளுக்கெல்லாம் தலையாயது சைவ சித்தாந்தம் சார்பான முப்பொருளுண் மையை முதன்முதல் நிறுவியமை யாகும். வடமொழி நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றிலும் திருமந்திரம், தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களிலும் தொன்று தொட்டு வலியுறுத்தப்பட்டு வந்த முப்பொருளாகிய இறைவன், உயிர், உலகு என்பவற்றுக்குக் கோட்பாட்டு ரீதியிலான விளக்கத்தினை அளித்தவர் மெய்கண்ட தேவர் ஆவார்.

மெய்கண்ட தேவர் தாம் கண்ட சித்தாந்த உண்மைகளை **“சிவஞான போதம்”** என்னும் நூல் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். இந்நூல் சித்தாந்த சாத்திர நூல்கள் பதின்நான்கிற்கும் மணிமுடியாய் திகழ்கிறது. சிவஞான போதம் பிரமாணஇயல், இலக்கணஇயல், சாதனஇயல், பயன் இயல் என நான்காக வகுக்கப்பட்டு ஒவ்வோர் இயலும் மும்மூன்று சூத்திரங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களும் பதி பற்றிய விளக்கம், உயிர் பற்றிய விளக்கம், உயிர்கள் தம் கரும வினைக்கு ஏற்ப அமையும் நிலை, தனு, கரணபுவன போகம் உடம்பிலிருந்து உயிர் வேறுபடும் பாங்கு, ஆணவத்தால் உயிர் பீடிக்கப்பட்டுள்ள பாங்கு, ஆன்மா தானாக அறியாது, இறைவனின் உயர்ந்த நிலை, ஆன்மா முத்தி நிலைபெறும் வழி, அறிவினால்

மாத்திரம் இறைவனை அடைதல், புலன்களின் வழியன்றி ஞானவழியில் இறைவனைக் காணுதல், பரிபக்குவ நிலை எய்தும் போது இறைவன் ஆட்கொள்ள வருதல், எல்லாம் இறைவன் செயல் என எண்ணும் நிலை, இறைவன் திருவருள் கூடினால் இன்பம் கூடும். இறை இன்பம் பெற்ற ஆன்மா திரும்பவும் இறையின்பத்தையே நாடுதல் என தத்துவ விசாரணைகளை விபரிக்கின்றன.

மெய்கண்டதேவர் சைவசித்தாந்த தத்துவங்களை நிறுவியதோடு மாத்திரமல்லாது வேதாந்தம் முதலிய தத்துவங்களின் தத்துவ விசாரணைகளில் நின்று சைவ மெய்யியலைக் காப்பாற்றினார். உபநிடத மகா வாக்கியங்களுக்கு சங்கரர் அத்வைத வேதாந்தக் கருத்துகளை முன்வைத்தது போன்று மெய்கண்ட தேவர் முன்வைத்த தத்துவக்கருத்துகள் "**சுத்தாத்துவித சைவசித்தாந்தம்**" என அழைக்கப்படுகின்றது.

மெய்கண்டதேவரது சைவப்பணிகளுள் அடுத்து முக்கியத்துவம் பெறுவது தனக்கென்ற ஓர் சீடர் பரம்பரையை உருவாக்கியமையாகும். அவரிடம் நாற்பத்தொன்பது சீடர்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கற்றுத் தெளிவுற்றனர். அவர்களுள் **அருணந்திசிவாச்சாரியார்** முதன்மையானவர்.

## ஆ. அருணந்தி சிவாச்சாரியார்

புறச்சந்தான குரவர்களில் மெய்கண்டாரை அடுத்து முக்கியத்துவம் பெறுபவர் அருணந்தி சிவாச்சாரியார். இவர் மெய்கண்டதேவரது சம காலத்தவர். மெய்கண்டதேவரைப் போன்று சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு பல பணிகளை அருணந்திசிவாச்சாரியார் ஆற்றியுள்ளார்.


அருணந்தி சிவாச்சாரியார்

மெய்கண்டதேவரது தந்தையாகிய **அச்சுதகளப்பாளரின்** குருவாக விளங்கிய அருணந்திசிவாச்சாரியார் தனது சீடனின் மகனாகிய மெய்கண்டதேவரிடம் ஞான உபதேசம் பெற்றார். வயதில் முதுமை பெற்ற திருநாவுக்கரசர் எவ்வாறு ஞானசம்பந்தரை வணங்கிச் சேவை செய்தாரோ அதே போல் வயதில் முதியவராகிய அருணந்தி சிவாச்சாரியார், தம்மிலும் வயதில் குறைந்த மெய்கண்டதேவரைக் குருவாகக் கொண்டார். மெய்கண்ட தேவர் தமக்கு உபதேசித்த சிவஞானபோதத்தை மறவாத அருணந்தி

சிவாச்சாரியார் **"மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிகல் உற்றாம்"** எனவும் "**எம்குருநாதர்.... தீதகல எமக்களித்த ஞான நூலைத் தேர்ந்துரைப்பேன் சிவஞான சித்தி**" எனவும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அருணந்தி சிவாச்சாரியாரது பணிகளில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது, சைவ சித்தாந்த தத்துவங்களை ஏனைய புறச்சமயங்களின் தத்துவங்களோடு ஒப்பிட்டு மேலானது என நிறுவியமையாகும். அகச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், புறச்சமயங்கள், புறப்புறச்சமயங்கள் என்ற சமயப்பிரிவுகளின் தத்துவங்களோடு வாதிட்டு சித்தாந்த சைவமே மேலானது என நிரூபித்தார்.

மெய்கண்ட தேவரது வேண்டுதலுக்கு அமைய அவரது சிவஞானபோத நூலுக்கு விளக்கம் கூறும் முகமாக **"சிவஞான சித்தியார்"** என்ற வழிநூலை அருணந்தி சிவாச்சாரியார் உருவாக்கினார். இந்நூல் பதினான்கு சித்தாந்த சாத்திர நூல்களுக்குள் விரிவானது. 301 விருத்தப்பாக்களைக் கொண்டதோடு பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. இவற்றுள் பரபக்கம் என்பது உலகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்டவாதம், ஆசீவகம், பட்டாசரியம், பிரபாகரம், சத்தப்பிரமவாதம், மாயாவாதம், பாற்கரியம், நிடிச்சுரசாங்கியம், பாஞ்சராத்திரம் ஆகிய சமய வாதிகளது கொள்கைகளை எடுத்துக்கூறி அவற்றை அளவை முறையினால் மறுப்பது ஆகும். சுபக்கம் என்பது சாத்திர நூல்களுக்குரிய அளவை கூறிய பின் முப்பொருள்களின் உண்மை அவற்றின் பொதுவியல்பு, சிறப்பியல்பு, பாசத்தினின்றும் நீங்கி கடவுளை அடைவதற்கான வழிகள், கடவுளை அடைந்தோர் தன்மை ஆகிய பொருள்களை விபரித்துக் கூறுவதாகும்.

அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார் நூலை அறிஞர்கள் பலவாறு போற்றியுள்ளனர். **"சிவத்தின் மேல் தெய்வமில்லை, சிவஞான சித்திக்கு மேல் ஓர் சாத்திரமில்லை"** என்றும் **"பார் விரிந்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஒரு விருத்தப் பாதி போதும்"** என்பன அவையாகும்.

சைவ சித்தாந்த சாத்திர விருத்திக்கு அருணந்தி சிவாச்சாரியார் ஆற்றிய பணிகளுள் மற்றொன்று **"இருபா இருப.ஃது"** எனும் சாத்திர நூலை உருவாக்கியமையாகும். இதில் அருணந்தி சிவாச்சாரியார் தமது குருவாகிய மெய்கண்ட தேவரை முன்னிலைப்படுத்தி அவரை நோக்கி, தாம் வினாக்களை வினாவுவதாகவும், அதற்கு மெய்கண்ட தேவர் விடையளிப்பது போலவும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை இருபது செய்யுட்கள் மூலம் விபரிக்கின்றார்.

அருணந்தி சிவாச்சாரியார் தனது சொத்துக்களைக் கூட சைவப்பணிக்காக தானமாக வழங்கியதை அறிய முடிகின்றது. தமிழகத்தின் திருத்துறையிலுள்ள அவரது நிலங்களை சைவ மெய்யியல் வளர்ச்சியின் பொருட்டு நன்கொடையாக வழங்கினார். இன்று அந்த நிலத்தை திருக்கைலாய ஞான பரம்பரையினரால்

உருவாக்கப்பட்ட திருவாவடுதுறை ஆதீனம் பொறுப்பேற்று ஆண்டு தோறும் அவரது குருபூசை விழாவை நடாத்துகின்றது.

## இ. மறைஞானசம்பந்தர்


மறைஞானசம்பந்தர்

சந்தானகுரவர் மரபில் அருணந்தி சிவாச்சாரியாரின் சீடராக விளங்குபவர் மறைஞான சம்பந்தர். மெய்கண்டாரைப் போன்று பக்குவ நிலையை எய்திய மறைஞானசம்பந்தர் சைவ சித்தாந்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளார்.

மறைஞான சம்பந்தரது சைவப்பணிகளுள் பிரதானமானது சைவசித்தாந்த தத்துவ உண்மைகளை எளிமையான வடிவில் போதித்தமையாகும். தனக்கு முன்னர் வாழ்ந்த மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார் என்போர் அருளிய சித்தாந்த நூல்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருப∴து ஆகிய நூல்களைக் கற்று அவை கூறும் சித்தாந்த உண்மைகளை தம் மாணாக்கருக்குக் கற்பித்தார்.

மறைஞான சம்பந்தர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள **திருக்களாஞ்சேரியில்** இருந்து சைவ சித்தாந்த உண்மைகளை மாணவர்களுக்குப் போதித்துக் கொண்டு இருந்தார். அப்போது உமாபதி சிவம் சோழமன்னர் தமக்களித்த பல்லக்கிலேறி பகற்பொழுதில் தீவர்த்தி, ஆலவட்டம், குடை, சாமரை முதலான பரிசனங்கள் புடைசூழப் பெரிய ஊர்வலமாக சென்றுகொண்டு இருந்தார். அப்போது மறைஞானசம்பந்தரிடம் கற்றுக்கொண்டிருந்த மாணவனொருவன் அவ் ஊர்வலத்தைத் திரும்பிப் பார்த்தான், பராக்குப் பார்த்த மாணவனை பாடத்தில் ஈடுபடுத்துவதற்காக மறைஞான சம்பந்தர் **"பட்ட கட்டையிற் பகற்குருடு போகிறது"** என்று குறிப்பிட்டார். பட்ட கட்டை என்பது காய்ந்த மரத்திலான பல்லக்கினையும், பகற்குருடு என்பது நண்பகலில் தீவர்த்தியுடன் நடுத் தெருவில் உமாபதிசிவம் சென்றமையையும் குறிக்கின்றது.

அச் சம்பவத்தின் மூலம் மறைஞானசம்பந்தர் மூன்று சிந்தனைகளை மாணவர்களுக்கு முன் வைத்தார்.

1. **ஆடம்பர வாழ்வு ஆன்மீக மேம்பாட்டுக்கு ஆகாது.**
2. **அகக்கண் திறந்தவரே கண்ணுடையார்; அல்லாதோர் 'பகற்குருடு' என மதிக்கப்பட வேண்டியவர்கள்.**
3. **என்றோ ஒரு நாள் இறப்பு எவருக்கும் நேரிடும்.**

மறைஞானசம்பந்தர் தனது சீடர்களின் பரிபக்குவ நிலையை உலகத்தவர்களுக்கு காண்பிப்பதற்காக பல சோதனைகளுக்குள் அவர்களை உட்படுத்தினார். உமாபதி சிவத்தை தனது சீடராக ஏற்றுக்கொள்ள முன் அவரது பரிபக்குவ நிலையை வெளிப்படுத்த மறைஞானசம்பந்தர் எண்ணினார். வீதி வழியே ஓடினார், ஓடியவரை உமாபதி சிவமும் பின் தொடர்ந்தார். மறைஞான சம்பந்தர் களைத்தவர் போல் அருகிலுள்ள நெசவாளர்களது சேரிக்குச் சென்று இரு கைகளையும் நீட்டினார். அப்பொழுது நெசவாளர் நெசவுக்காக காய்ச்சி வைத்திருந்த கஞ்சியை அவர் கையில் ஊற்றியதும் அவர் அதனை உண்டார். அவ்வாறு உண்டபோது அவரது முழங்கை வழியாக வழிந்த கஞ்சியை உமாபதிசிவம் ஏந்திப் பருகினார். உமாபதி சிவத்தின் பக்குவநிலையினை மெச்சிய மறைஞான சம்பந்தர் தனது தலைமைச் சீடராக ஏற்றுக்கொண்டு தனக்கு பின்னர் திருக்கைலாயஞான பரம்பரையைத் தொடர உமாபதி சிவாச்சாரியாருக்கு வழிகாட்டினார்.

மறைஞான சம்பந்தரது பெருமைகளையும், அவரது சைவ சித்தாந்தப் பணிகளையும், உமாபதி சிவாச்சாரியார் தனது நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். சந்தான குரவர் நால்வருள் மறைஞானசம்பந்தர் மட்டுமே சித்தாந்த நூல்கள் எதுவும் எழுதவில்லை எனக் கூறப்படுகிறது. ஆயினும் அண்மைக் காலங்களில் அறிஞர்கள் பலரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி மறைஞான சம்பந்தர் **"சதமணிக்கோவை"** என்ற பிரமாண நூலை எழுதியதாகவும் அது **"சித்தாந்தஞானபோதம்"** என அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். அத்தோடு தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் காணப்படும் **"சகஸ்ர நாம பாஷ்யம்"** என்னும் உரை நூலையும் இவரே எழுதினார் என அறிஞர்கள் கருதுவர்.

## ஈ.உமாபதி சிவாச்சாரியார்

சந்தான குரவர் நால்வருள் இறுதியாக விளங்குபவர் உமாபதிசிவாச்சாரியார். அவர் மறைஞான சம்பந்தரது சமகாலத்தில் வாழ்ந்தவராவர். சைவ சமய வளர்ச்சிக்கு உமாபதிசிவாச்சாரியார் பல நிலைகளில் பணியாற்றியுள்ளார்.


உமாபதி சிவாச்சாரியார்.

வயதில் முதிர்ந்த அருணந்தி சிவாச்சாரியார் எவ்வாறு தம்மிலும் வயதிற் குறைந்த மெய்கண்டதேவரை தமது குருவாக ஏற்றாரோ அதுபோன்று வயதில் முதிர்ந்த உமாபதிசிவாச்சாரியார்வயதில்குறைந்த மறைஞானசம்பந்தரிடம் ஞான உபதேசம் பெற்றார். மறைஞானசம்பந்தரால் பரிபக்குவ நிலையை அடைந்த உமாபதி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர்

காட்டிய வழியில் நின்று சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்.

பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்களில் எட்டு நூல்களை உமாபதி சிவாச்சாரியாரே ஆக்கியுள்ளார். **சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் ப∴றொடை வெண்பா, கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், நெஞ்சுவிடு தூது, சங்கற்ப நிராகரணம்** என்பவையே அவையாகும். அந் நூல்களூடாக சைவசித்தாந்தம் வலியுறுத்தும் முப்பொருட்களான பதி, பசு, பாசம் என்பவற்றின் இயல்பு நிலை, அவற்றின் வியாபக நிலை, நித்தியத்தன்மை, முத்திநிலை என்பவற்றை எளிமையான குறள்கள் வாயிலாகவும் வினா விடைகள் மூலமாகவும் விபரித்துள்ளார்.

உமாபதி சிவாச்சாரியார் தனது குருவாகிய மறைஞான சம்பந்தரின் அருமை, பெருமைகளையும் தனது நன்றி மறவாப் பண்பினையும் வெளிப்படுத்துவதாக **போற்றிப் ப∴றொடை வெண்பா, நெஞ்சுவிடு தூது** என்பன அமைகின்றன. அகச்சமயக் கொள்கைகளை மறுதலித்து சைவ சித்தாந்தக் கொள்கைகளை முதன்மைப்படுத்தும் முகமாக உமாபதி சிவாச்சாரியாரால் அமைக்கப்பட்ட நூல் **''சங்கற்ப நிராகரணம்''** ஆகும்.

உமாபதி சிவாச்சாரியார் பல அற்புதங்களையும் செய்து ஆண்டவனுக்குப் பணி செய்துள்ளார். அவர் சிவனடியார்களை சாதி அடிப்படையில் நோக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். தில்லை நடராஜருக்குப் பூசை செய்யும் அந்தணராக விளங்கிய உமாபதி சிவாச்சாரியார் நெசவாளரிடம் கூழ் வாங்கியுண்டார். அதனால் தில்லைவாழ் அந்தணர்கள் அவரை தகுதி குறைந்தவராகக் கருதி ஒதுக்கியபோதும் மனம் சோர்வின்றி, தில்லைக்கு அருகிலுள்ள **''கொற்றவன் குடி''**யில் திருமடமொன்றை அமைத்து அங்கேயே தங்கினார்.

**பெற்றான் சாம்பான்** என்னும் விறகு வெட்டிக்கு உமாபதி சிவாச்சாரியார் முத்தியளித்தமை அவரது அற்புதங்களில் சிறப்பானதாகும். தில்லைவாழ் அந்தணர்களது மடப்பள்ளிக்கு நாள்தோறும் விறகு கொடுக்கும் சாம்பானுடைய கனவில் தோன்றிய சிவன் **''என் அன்பன் உமாபதிசிவத்துக்கும் விறகு கொடுத்து வா''** என அருளிச் செய்து அவனிடம் ஒரு சீட்டுக் கவியையும் சேர்ப்பித்து அருளினார்.

**அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டு- படியின்மிசைப்**
**பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து**
**முத்தி கொடுக்க முறை.**

சாம்பான் தனது கனவிற் கண்டவாறு கொற்றவன் குடியிலுள்ள திருமடத்திற்கு எதுவித சன்மானமுமில்லாது விறகு கொடுத்து வந்தான். சாம்பானது பக்குவ நிலையைக் கண்ட உமாபதி சிவாச்சாரியார் அவனது மனைவி காண **சத்தியோ நிர்வாண தீட்சை** வழங்கி அவனை முத்தியடையச் செய்தார்.

உமாபதி சிவாச்சாரியாரது சைவப்பணிகளுள் குறிப்பிடத்தக்க மற்றுமொரு அம்சம் அவர் முத்தியடைவோர் பெறும் பயன்பாட்டினை விளக்கியமையாகும். உமாபதி சிவாச்சாரியாரால் சாம்பானுக்கு கிடைத்த முக்திப்பேறு பற்றி அறியாத அவனது மனைவி மன்னனிடம் சென்று ''மடத்துச் சாமியார் என் கணவனை எரித்து விட்டார்'' என முறையிட அரசனுக்கும் உலகத்தவர்க்கும் முத்தியடைவோர் பெறும் நற்பலனை விளக்கும்பொருட்டு முத்தியளிக்கும் முறையைச் செய்து காட்ட விரும்பினார்.

தனது மடப்பள்ளியின் அருகில் நின்ற முள்ளிச்செடிக்கு முத்தியளித்தார். அப்போது அது கருகிச் சாம்பலாகி அச் சாம்பலிலிருந்து ஒரு முனிவர் தோன்றி உமாபதி சிவாச்சாரியாரை வணங்கிவிட்டு ஆகாயமார்க்கமாகச் சென்றார். எனவே முள்ளிச்செடி முனிவராக முத்திப்பேறு பெற்றது போன்று, சாம்பானும் நன்முத்தியைப் பெற்றான் என்பதனை உலகத்தோருக்கு நிரூபித்துக் காட்டியுள்ளார். ஏழை எளியவர்களோடு கூடி வாழும் மெய்ஞ்ஞானிகள் எத்தனையோ சோதனைகளை சமூகத்தில் எதிர்கொள்ள நேரிடும் என்பதற்கு உமாபதி சிவாச்சாரியாரின் வரலாறு சிறந்த உதாரணமாகும்.

உமாபதி சிவாச்சாரியார் ஆலயங்களினதும் சிவனடியார்களினதும் சிறப்புக்களை தனது நூல்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். கோயில் என்று சிறப்பித்து அழைக்கப்படும் சிதம்பரத்தின் சிறப்புக்களை அவர் **''கோயிற்புராணம்''** என்னும் புராண நூல் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். அதே போன்று அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றை பெரியபுராண நூல் மூலம் விபரித்துச் சென்ற சேக்கிழார் பெருமானது சைவப்பணிகளைக் கண்டு வியந்த உமாபதி சிவாச்சாரியார் **''சேக்கிழார் புராணம்''** எனும் புராண நூலை உருவாக்கினார்.

உமாபதி சிவாச்சாரியார் சைவ சித்தாந்த உண்மைகளை தமிழ்மொழியில் விளக்கிச் சென்றது போல, வட மொழியிலும் விபரிக்கும் முகமாக **''பௌஷ்கர விருத்தி''** என்ற நூலை வட மொழியில் எழுதியுள்ளார்.

சந்தான குரவர் நால்வராகக் காணப்பட்ட போதிலும் உமாபதி சிவாச்சாரியாருடன் அம்மரபு நின்று விடாது தொடர்கின்றது. உமாபதி சிவாச்சாரியாரின் சீடராகிய **''நமசிவாய தேசிகர்''** திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தோற்றுவித்தவராவர். தருமபுர ஆதீனமும் திருக்கைலாய பரம்பரையில் வந்தோராலேயே அமைக்கப்பட்டது என்பர்.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) திருக்கைலாய பரம்பரையில் வந்த புறச் சந்தான குரவர்கள் நால்வரும் யாவர்?

2) சித்தாந்த நூல்களிடையே மணிமுடியாய் விளங்கும் நூல் யாது?

3) அருணந்தி சிவாச்சாரியாரின் பணிகள் இரண்டு தருக.

4) மறைஞானசம்பந்தர் மாணவர்களுக்கு முன் வைத்த மூன்று சிந்தனைகளும் யாவை?

5) உமாபதி சிவாச்சாரியாரின் பணிகள் இரண்டு தருக.

## செயற்பாடு

1. சைவசமய வளர்ச்சிக்கு சந்தான குரவர்கள் ஆற்றிய பணிகளைப் பற்றி ஐந்து நிமிடம் பேசுக.
2. திருக்கைலாய பரம்பரையின் தொடர்ச்சியினை அட்டவணைப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

1. சைவ சமய வளர்ச்சிக்கு சமய குரவர்கள் போன்று சந்தான குரவர்களும் பங்காற்றியுள்ளனர்.
2. சைவ சித்தாந்த தத்துவம் மெய்கண்ட சாஸ்திர நூல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
3. சாதாரண மக்களது வாழ்வியலோடு சந்தான குரவர்கள் இணைந்து செயற்பட்டனர்.
4. சந்தான குரவர் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலம் தொடர்கின்றது.